535

தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை | 3-5-58 | சனிக்கிழமை | இதழ் 42

1 - MAY 1958 MADRAS

ஆரூர் அழைக்கிறது!

198382

பொன்னித்துறைவன், புகழ் மன்னன், வீரமிகு கன்னித் தமிழன் கரிகாலன் சீமையில், வண்டமிழின் சுரங்கமாய், வான் விளக்கின் பேரொளியாய் அறிவின் தலைக்கோட்டமாய் விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சி மிகுந்த மூன்றாவது மாநாடு கூடுகிறது. தென்னாடு மீண்டும் எழில் பெற்று ஓங்கிட அஞ்சாது உழைக்கின்ற ஆன்றோர்கள் கூடுகட்டி, "நாடென்றால் திராவிடமே, நல்லமொழி என்றால் செந்தமிழே" என்று பண்ணிசைக்கப் படைவீடு அமைக்கிறார்கள். யின் திருநகரில் வண்ணத்திராவிடத்தின் வாலிபர்கள், பிறந்தகத்தின் வலிவையும் வனப்பையும் வையகத்து அரசியல் மதயானைகளுக்குப் பிரகடனப் படுத்தமுகாம் அமைக்கிறார்கள்.

இம்மாதம் 10, தேதிகளில் திருவாரூரிலே நடக்க இருக்கும் மாநாடு சிறப்புக்குச் சிகரமாய், ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்க இருக்கிறது. சுயமரியாதை இயக்கத்தை வீறுபெறச் செய்த சோறுடைய சோழ வளமதியழகன் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார். அன்னையின் கால்விலங்குகளை உடைத்தெறியும் அரிமாவின் அறைகூவலாய் மாநாட்டுத் தலைவரின் சொற்பொழிவு திகழப்போகிறது. 'அண்ணாமலைக்கு அரோகரா'ப் பாடும் ஆண்டிப் பண்டாரங்கள் கூடும் நகரில், 'அண்ணாத்துரைக்கு ஜே' போடும் பட்டாளத்தையே சேர்த்துவிட்டானே என்று மூவர்ணக்கொடிக்காரர்களையும், முழு உலகக் கட்சிக்காரர்களையும் எண்ணி எண்ணிச் சாகச்செய்யும் திருவண்ணாமலை தீரர் ப. உ. சண்முகம் மாநாட்டைத் துவக்கி வைக்கிறார். தீச்சுடர்பறக்க அவர் திருப்புரை விளங்கும்.

இன்று ஏர் உழவர் வழிந்தோட வளம்பெற்றுத் திகழ்கிறது. தென்னகமெங்கணுமிருந்து திருவாரூர் சேரும் கண்ணனைய தமிழ்ப் படையை அன்பு தவழும் முகங்களோடு ஆரத்தழுவி குறைவின்றிக் கவனிக்க பண்புசேர் முன்னேடிகள் காத்திருக்கிறார்கள். நீரிலிருந்தே பகை தீர்க்கும் நெடுமுதலை டில்லி தன்னை - சொந்த ஊரிலிருந்து கூவி அழைக்கும் போர்ச்சங்கே ஆரூர் மாநாடு, என்பதனை காங்கிரஸ் தலைவர்கள் உணரப் போகிறார்கள்.

...ட்டையின் பாலப்பருவத்தைப் பாலூட்டி வளர்த்துத்தக்கோரை ஆளாக்கி, மற்றோரைத் தள்ளி, நாட்டுக்கு உற்றாரைத் தயாரித்த ஒப்பற்ற வீரன்—ஓமான் கடலிலே மறைந்த புதல்வன் - கண்ணீர்த் துளிகளை நாடெங்கணும் அரும்பவிட்ட பன்னீர்ச்செல்வம் பிறந்த மண்ணில்-வளர்ந்த மண்ணில்-ஓங்கு புகழ்கொண்ட மண்ணில்-இந்நாட்டின்-தாய்நாட்டின்- முன்னோர்கள் ஆண்ட பொன்னாட்டின் விடுதலை வீரர்கள் முரசை முழங்க இருக்கிறார்கள்.

சிங்க நெஞ்சுடையான், சீற்றமிகு தமிழன், செங்குருதி பாய்ச்சும் திருமேனி, கொஞ்சமுமே அஞ்சாது போர் செய்து கொள்கைக்கே பலியான **அழகிரியின்** மாவட்டத்தில், ஆரூர்ப் பெருநகரில்—செயல்வீரன், செந்தமிழின் இளநாயகன் கலைஞர் கருணாநிதி நாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரன்னேட்டில் புகழிடத்தைப்பிடித்துக்கொண்ட திருநாடு; செந்தமிழின் நல்லறிஞன், தென்னகத்தின் உயர் தலைவர் அண்ணாவை இரண்டாவது முறை பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்த பொதுக்குழுவைக் கூட்டி மகிழ்ந்த நாடு. நரம்பில்லா நாக்குடைய நாடாளும் பண்டிதரின் வெறிப் பேச்சை 'மறப்போம் மன்னிப்போம்' என்றுரைத்து கழகத்தின் பெருநோக்கை உலகறியச்செய்த நாடு-அங்கே தி. மு. க. மாநாடு.

'வாழ்க திராவிடம்' - என்றால் வாங்கிக்கொள் உதை என்ற காலத்தில் வீங்கிய நெற்றியைத் தடவக்கூட நேரமில்லாமல் விடுதலைகீதம் பாடி, சின்னப்பருவத்தில் சிறையாப்புகழ்பெற்றிட்ட கனியூர் 'இளவட்டம்' கே. ஏ. பாடினால் தேனூற, பார்த்தக்கால் மனம்குளிர, நாடினால் சண்மலர—நமது நடிப்பிசைப் புலவர் ராமசாமி அவர்கள் இன்னிசை பொழிய மாநாடு தொடங்க இருக்கிறது.

தீந்தமிழன் நல் இளங்கோ, தெள்ளுதமிழ்ச் சாத்தனார், ஆக்கம் நிறை சீர்புலவர், சேக்கிழார், கம்பர், தெளிவு சேர் நல்...ஞர் பாக்களிலே புகழ் பெ... தஞ்சை மாவட்டத்தில் நடைபெற இருக்கும் தி. மு. கழக மாநாடு தாயகத்தின் எதிர்கால வாழ்வுக்கு நம்பிக்கைதரும் திட்டங்களைத் தரத்தவறாது என்பதை திராவிடம் நம்பலாம்.

ஈட்டி நிகர் விழியுடைய வாலிபர்கள் நாட்டினுடைய விடுதலைக்கு வழிகோலத் திரளுகிறார்கள். போர் மறவன் உலாவிய செம்மண்ணும் தஞ்சை நிலம் பூம்புகார் எழில் நகரை,-புகழ் வளர்த்த மன்னர்களை எண்ணி எண்ணிப் புலம்பியழும் காவிரித் தாய், இனி வரும் திராவிடத்தை இன்பத் திருநாட்டைப் புகழ்ந்து பாடும் காலம் நெருங்கிவிட்டது. அதோ இளங்கோ அழைக்கிறார்.

தென்னரசு

அவருடைய அழைப்பு அதிராம் பட்டினத்து அலையிலே மிதந்து வருகிறது.

காவிரியே பாடுக! கொஞ்சு தமிழ்க்கலையர்கள், நஞ்சுநிகர் அந்நியரை வென்று பெறப்போகும் வெற்றிதனைப் பாடுக!

அந்தோ பரிதாபம்! இவர்களுக்கு அனுதாபம்!



அண்மையிலே, அமிர்தசரஸ் 'ஸ்பெஷல் காங்கிரஸ்' கூடவிருக்கிறது என்ற செய்தி வந்தவுடனே, நாட்டு மக்களின் ஒரு சாராருக்கு குழப்பமேற்பட்டது.

முன்னம் கௌஹத்தியில் கூடிய காங்கிரஸ்தான் 'ஒரிஜனல்' காங்கிரஸ் என்றும், தற்போது அமிர்தசரசில்கூட விருப்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் 'ஸ்பெஷல் காங்கிரஸ்' என்றும் தெளிந்த மக்களுக்கு விந்தை தீர்ந்தது, வேடிக்கை மிகுந்தது.

கூடினவர்கள் முதல் வேலையாகப் 'பெயர் மாற்றத் திருவிழா' கொண்டாடினர்கள்.

பொலிட்பீரோ, இனி 'சென்ட்ரல் எக்ஸிகியூடிவ் கமிட்டி' என்று அழைக்கப்படுமாம்.

'சென்ட்ரல் கமிட்டி'யை இனி 'நேஷனல் கமிட்டி என்பார்களாம்.

அதோடு விட்டார்களா?

கொள்கையில் வேறு குழப்பம்!

இனிமேல் அமைதியான முறையில் சோசலிசக் குடியரசை உண்டாக்கப்போகிறார்களாம்.

'இனிமேல் நான் திருடவில்லை' என்று ஒருவன் சொன்னால் அதற்கு என்ன பொருள்? இதுவரையில் அவன் திருடிக்கொண்டு, இருந்தான் என்றுதானே இருக்க முடியும்.

ஆனால், நாம் ஒருவிதத்தில் கம்யூனிஸ்டுத் தோழர்களைப் பாராட்டாமல் இருக்க இயலாது. அவர்கள் எப்படி உண்மையை ஒத்துக் கொண்டு குற்றவாளியைப்போல் ஒப்புதல் வாக்குமூலம்' கொடுக்கிறார்கள், பாருங்கள்! 'இதுவரையில் நாங்கள்பலாத்காரச் செயலால், கம்யூனிஸ சர்வாதிகாரத்தை இந்தியாவில் நிலைநாட்டவிருந்தோம். அந்த உழைப்பில் தோற்றுவிட்டோம். இனி அமைதியான முறையில் சோசலிசக் குடியரசை உண்டாக்கப்போகிறோம்' என்று, கசாப்புக்கடைக்காரன் புத்தரை தன் குல தெய்வமாக ஏற்றுக்கொண்டது போல் பேசுகிறார்கள்!

இந்த அவர்களின் அணிமை 'வேஷம்' நம்மை மூன்று வினாக்கள் விடுக்கத் தூண்டுகிறது.

ஒன்று, 'நஞ்சு' இருக்கின்ற சீசாவின்மேல் ஒட்டியிருந்த, 'நஞ்சு, 'லேபி'லை நீக்கிவிட்டு, 'தேன், இனிக்கும்' என்று மாற்றுச் சீட்டு ஒட்டிவிட்டால் மட்டும், இனிக்குமா, நஞ்சு?

இரண்டாவது கேள்வி, மளிகைக் கடை மன்னார்சாமி ஏன் கடையை மூடுகிறான்? நட்டம் வந்ததால்! ஏன் நட்டம் வந்தது? சரக்கு நன்றாக இல்லை!

மூன்றாவதாக, கடையை மூடினவன் மூடிவிட்டுப் போகக்கூடாதோ, மிகுந்த பணத்தில் பிள்ளை குட்டிகளாவது அரை வயிறுக் கஞ்சி குடிக்கும் என்ற கேள்வி. பதில் இதோ வருகிறது,' அவன் புத்தி அவனை வாழவிடுமா?'

மளிகைக் கடை இருந்த இடத்தில் மருந்துக் கடை வைத்த மன்னார்சாமி, 'மளிகைக் கடை' என்ற பெயர்ப் பலகையை இன்னும் மாற்றவில்லை. மருந்துக் கடையிலாவது நல்ல சரக்காக இருக்கிறதா வென்றால் அதுவும் இல்லை. வேறு மூன்று மருந்துக்கடைகளில்வைத்து விற்பனையாகாத அதே உளுத்த சரக்கை மன்னார்சாமியும் வைத்திருக்கிறார். அந்தோ பரிதாபம். மளிகைக்கடைமூடப்பட்டுவிட்டது. இனி மருந்துக் கடையையும் மூட வேண்டியதுதான்.

கம்யூனிஸ்டுகள் பலாத்கார கம்யூனிசத்தை இந்தியாவில் பரப்ப முயன்றனர். தோற்றனர். கம்யூனிஸ்டுக் கட்சி என்ற பெயரை மாற்றாமல், மளிகைக்கடை மன்னார்சாமி, மருந்துக்கடை வைத்த பின்பும் மளிகைக்கடை மன்னார்சாமியாகவே இருப்பதுபோல், சோசலிசக் குடியரசை உண்டாக்கப் போகிறார்களாம். இன்னும் அவர்கள் சோசலிச இந்தியாவில் விலை போகாத சரக்கு என்றும், முன்னமே மூன்று கட்சிகள், காங்கிரஸ் கட்சி, சோசலிஸ்ட் கட்சி, பிரஜா சோசலிஸ்ட் கட்சி-இந்த உளுத்த சரக்கை வைத்துக்கொண்டு விற்பனையாகாமல் நட்டப்பட்டு வருகின்றன என்றும் ஏனோ உணரவில்லை?

வேறு விதமாகப் பார்த்தால், அப்படி உண்மையிலேயே அவர்களுக்குப் பலாத்காரத்தில் வெறுப்பு ஏற்பட்டிருந்தால், குடியரசுத் தத்துவத்தில் விருப்பு வளர்ந்திருந்தால் 'அமிர்தசரஸ்' ஸ்பெஷல் கம்யூனிஸ்டுக் காங்கிரஸ் என்ன முடிவு செய்திருக்க வேண்டும்?

'எங்களுக்கு கம்யூனிஸ பலாத்காரக் கொள்கையில் நம்பிக்கை தளர்ந்துவிட்டது. இனி சோசலிசக் குடியரசுக் கொள்கையைத்தான் ஆதரிக்கப் போகிறோம். ஆகையினால் கம்யூனிஸ்டுக் கட்சியை கலைத்துவிடுகிறோம்' என்றல்லவா நல்ல முடிவு எடுத்திருக்க வேண்டும்? நாட்டவர்கள் புகழ்ந்திருப்பார்கள்.

செய்தார்களா, இல்லையே!

பெயர், மளிகைக்கடை, விற்பனையோ மருந்து ரகம்!

பெயர், 'கம்யூனிஸ்டுக் கட்சி' கொள்கையோ சோசலிசம்!

இதோடு நின்றார்களா?

பிரிவினை சக்திகளை ஒடுக்க வேண்டுமாம். முடிவெடுத்திருக்கிறது, 'ஸ்பெஷல் காங்கிரஸ்.'

திராவிடத்தில் தி. மு. க. பிரிவினை சக்தியை வளர்க்கிறது. அதை ஒடுக்கவேண்டும் என்று வேறு பெயர் குறிப்பிட்டு முடிவு எடுத்திருக்கிறார்கள்!

இந்த முடிவைக் கேட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஏன் என்றால் கம்யூனிஸ்ட் கட்சி 'அகில உலகக் கண்ணோட்டம் கொண்ட' ஏக இந்தியக்கட்சி வேற்றுநாட்டுக் குருசேவின் ஆசியைப் பெற்றது; கேரளத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி, அடுத்த தேர்தலில் மேற்கு வங்காளத்திலும் கேரளத்தைப்போல் கம்யூனிஸ்டுக் கட்சி பொறுப்பில் அமரலாம் என்று இறுமாந்திருக்கும் கட்சி, அது நம்மைக் கண்டு அஞ்சுகிறது அந்த அச்சத்தினால் ஏற்பட்ட இறுதித் துணிச்சலில், நடுங்கும் கரத்தால் தடியைப் பிடித்துக்கொண்டு, இதோ பார்த்தாயா, தடி, அடித்துவிடுவேன். ஓடிவிடு என்கிறது.

தி. மு. க. பிரிவினை சக்தியை வளர்க்கிறது!-கூறுகிறார்கள்; கூறக் கூட இல்லை, குற்றம் சாட்டுகிறார்கள்!

'பிரிவினை', 'விடுதலை' என்ற இரண்டு சொல்லுக்குமுள்ள வேற்றுமை கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் அஜாய்கோஷுக்குத் தெரியவில்லையே என்று நாம் குறைகூறவில்லை. ஏனென்றால்அவர் தமிழ் தெரியாதவர். ஆனால், தமிழ் தெரியாத வடநாட்டவரைத் தங்கள் தலைவராகக் கொண்டிருக்கிற'தமிழ் இலக்கிய மேதை' ஜீவானந்தமாவது அஜாய்கோஷுக்கு கூற வேண்டாமோ, பிரிவினை என்றால் ஒன்றை இரண்டாக்குவது, விடுதலை என்றால் இரண்டை இரண்டாக்குவது என்று!

விரைவில்!

இவர்தான்

எம். ஜி. ஆர்.

ராஜம்-மணாளன்

எழுதுகிறார்

இந்த அடிப்படைச் சொற்பொருள் வேற்றுமையை யார் புரிந்துகொண்டாலும் 'தி. மு. க. பிரிவினை சக்தி' என்று கூறமாட்டார்கள்; தி. மு. க. ஒரு விடுதலை இயக்கம் என்று வாழ்த்துவார்கள்.

கேரளாவின் முதலமைச்சர் கம்யூனிஸ்ட் நம்பூதிரிபாட், அஜாய் கோஷைக் காணச் சென்றால், கூடத்தில் இல்லாத நாற்காலியை கொண்டு வந்து போட்டு உட்காரச் சொல்லுகிறார்; ஜீவானந்தமும்,ராமமூர்த்தியும் போனால்?

இருக்கின்ற நாற்காலியையும் எடுத்து அப்பால் போட்டுவிட்டு, இருவரையும் நிற்க வைக்கிறார்! ஏன்?

1952-பொதுத் தேர்தலில் இல்லாத சக்தியை 1957-ல் நம்பூதிரிபாட் கேரளத்தில் பெற்றார்!

ஜீவானந்தங்களும், ராமமூர்த்திகளும், கல்யாண சுந்தரங்களும் 1952-ல் இருந்த சக்தியை 1957ல் தமிழகத்தில் இழந்தனர்!

இந்த இழி நிலைக்கான காரணத்தை இவர்கள் எண்ண வேண்டாமா? 'ஏக இந்தியா' என்றுஎதிர் மேளம் கொட்டும் இவர்கள் சிந்திக்க வேண்டாமா?

அவர்கள் எதைச் சிந்திக்க வேண்டும்?

இதோ......

யூகோஸ்லேவியா என்பது ஐரோப்பாவில் உள்ள ஓர் சிறிய நாடு. அதன் தலைவர் டிட்டோ. இது ஓர் கம்யூனிஸ நாடு.

சீனாவைப்பற்றியும் நமக்குத் தெரியும். கம்யூனிஸ்டுகளின் 'பார் பாட்'டில், சீனாவைப் பார்' என்ற அடி அடிக்கடி வரும். அதன் தலைவர் மா-சே-துங்.

ரஷ்யா-சொல்லத் தேவையில்லை. கம்யூனிஸ்ட் 'ஒரி ஜனல்' நாடு. இதன் தலைவர்தான் குருசேவ். நாம் அறிந்த செய்தி.

இந்த மூன்று நாடுகளும் கம்யூனிசத்தை ஆதரித்தால்கூட, காரல் மார்க்ஸின்'மூலதன'த்தை தங்கள் வேதமாகக் கொண்டிருந்தால்கூட, 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்' என்று அடிக்கடி குரல் எழுப்பினால்கூட, செங்கொடி தூக்கிச் சிறப்பாக வலம் வந்தால்கூட தனித்தனி நாடுகளாக இயங்குவது ஏன்? மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து ஏன் 'ஏக ரஷ்யா' 'ஏக உலகம்' ஆகவில்லை? மூன்று வேறு தலைவர்கள் ஏன்? மூன்று நாடுகளுக்கும் தனித் தனியான எல்லைக் கோடு ஏன்? ஒரு ரஷ்யன்-குருசேவ் என்று வைத்துக்கொண்டாலும்-சீனாவிற்குள் நுழைய வேண்டுமென்றால் ஏன் அனுமதி பெற வேண்டியிருக்கிறது?

அவர்கள் அப்படித் தனித்து இருப்பதில் பொருள் இருக்கிறது, பயன் இருக்கிறது, நன்மை இருக்கிறது. எப்படி என்றால் யூகோஸ்லோவேகியாவும், சீனாவும், ரஷ்யாவும்தனித்தனி இனம் வாழும் தனித்தனி நாடுகள். அவைகள் ஒன்றுடன் இன்னொன்று சேர்ந்தால் ஒரு நாடு இன்னொரு நாட்டைஅடக்கி,ஆளும் நிலைதான் வரும் அப்படி அவைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்க வேண்டிய அவசியமுமில்லை.

தன்னுடைய கால்களால் நின்று நடந்து, ஓடக்கூடியவனுக்கு இரவற் கால், அதுவும் மரக்கால் ஏன்?

இந்த வாதத்தை அப்படியே இந்தியத் துணைக்கண்டத்துக்கு ஒப்பிடுவோம். இந்தியா என்பது ஒரு நாடு அல்ல. பல நாடுகள் உட்கொண்ட துணைக்கண்டம். தி. மு. க. பல்லாண்டுகளாக கூறிவருவது மட்டுமின்றி, பல்லறிஞர்களும் ஒத்துக்கொண்டுள்ளனர். கம்யூனிஸ்டுகள் வேண்டுமானால், 'அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி'யை கலைத்துவிட்டு, 'திராவிடக் கம்யூனிஸ்டுக் கட்சி' 'மேற்கு வங்காளக் கம்யூனிஸ்டுக் கட்சி', 'மராத்தியக் கம்யூனிஸ்டுக்கட்சி' என்று தனித் தனி நாட்டுடன் இயங்கட்டுமே!

மேலைநாட்டான் மின்விளக்குத் தத்துவத்தைக் கண்டுபிடித்தான் என்பதற்காக, நமது வீட்டில் எரியும் மின்விளக்கு விசையை அமெரிக்காவில் வைத்துவிட்டு ஐசன்ஹோவரையா, தினசரி மாலை ஆறு மணிக்கு விசையை அழுத்துங்கள், எங்கள் வீட்டு விளக்குகள் எரியட்டும்' என்று கேட்கிறோம்! இல்லையே! அவன் கண்ட மின் விளக்குத் தத்துவத்தை தெரிந்து கொண்டோம். பாபநாசம், பைக்காரா, சிவசமுத்திரம் மின்விசை தயாரிப்பு நிலையங்களை அமைத்தோம். நமது வீட்டில் மின்விளக்கு

— 7ம் பக்கம் —

198382
சென்னை-600 008

> ''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !''

எண்ணம்

மலர் 4 || 3–5–58 || இதழ் 42

தேபர் வருகிறார்! அண்ணா போகிறார்!

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று, பொலிவு பெற்று விளங்கும் ஒரு உன்னதமான கட்டத்திற்கு வந்திருக்கிறது. மற்றவர்களால் உணர வழியில்லாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த நாம்-உணர்ந்த ஒரு சிலரால் பாராட்டப்படமுடியாத வகையில் மறைக்கப்பட்ட நாம் இன்றும் கட்சி சார்பற்ற மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் எதிர்த்தவர்களுக்கு 'அரசியல் எமன்' போலவும் காட்சி தரும் வகையில் பலம் பெற்றுவிட்டோம். உலகத்தில் மிகப் பெரிய அரசியல் ஞானி என்று புகழ்பெற்றவர்களின் கணக்கைக்கூடப் பெரும் பிழையாக்கிவிட்டு நாம் வளர்ந்திருப்பதை எண்ணி இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் விசனப்படத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர்கள் தங்களுடைய பிரயத்தனங்களிலெல்லாம் நம்பிக்கை இழந்து உள்ளம் இடிந்து வடநாட்டு அரசியல் நட்சத்திரங்களை இறக்குமதி செய்துகொண்டு வருகிறார்கள். எந்தத் தலைவர் வந்தாலும் வந்த விருந்தாளி சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து விருந்தினர் விடுதிக்கோ அல்லது ராஜபவனத்திற்கோ போய்ச் சேருவதற்குள், அவரை வரவேற்கப் போகும் சென்னைத் தலைவர்கள் கழகத்தைப்பற்றிய உண்மை விபரங்களை மறைத்து புதிய கதைகளைச் சொல்லி வைத்துவிடுகிறார்கள். அதைக் கேட்ட வடநாட்டு விருந்தாளி முதன் முதலாக மேடையில் ஏறியதும் தி. மு. க. வகுப்பு வாதக்கட்சி என்று முழங்கத் தொடங்கிவிடுகிறார். மொரார்ஜி வந்தாலும் சரி, மோதிலால் மகன் வந்தாலும் சரி அவர்களுக்குச் சென்னை மந்திரிகள் தரும் வரவேற்பு தி. மு. க. வைத் திட்டுவதற்குத்தானே தவிர, உண்மையான அன்பினால் அல்ல!

இப்போது வடநாட்டில் தி. மு. கழகத்தைப்பற்றிய பேச்சு அதிகரித்துவிட்டது. தலைமை பீடத்தை வட தேசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் எல்லா அகில இந்தியக் கட்சிக்காரர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றியே பேசுகிறார்கள். தங்களுக்குள்ளிருக்கும் விரிந்த வேறுபாடுகளையெல்லாம் மறந்துவிட்டு 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கை வைத்து தென்னாட்டில் வேர் விட்டிருக்கும் தி. மு. கழகத்தை ஒழிக்க அவர்கள் கூட்டு முகாம் அமைக்க பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள்.

'தி. மு. கழகம் ஒரு மாகாணக் கட்சி; இது தலையெடுக்காது' என்று தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளால்கூட ஒரு காலத்தில் இகழ்ந்துரைக்கப்பட்ட நிலை அழிந்து இன்று அவர்களே-வடநாட்டின் தலைவர்களுக்கு மத்தியில் அமிர்தசரஸ் மாநாட்டில் தி. மு. கழகத்தைப் பற்றிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிடத் தலைப்பட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட்டு மாநாடாக இருந்தாலும், காங்கிரஸ் மாநாடாக இருந்தாலும் முதன் முதலாக நிறைவேற்றப்படும் தீர்மானம் தி. மு. கழகத்தைப் பற்றியதாகத்தான் இருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் அமிர்தசரசிலே மாநாடு நடத்தி முடிந்தவுடன், காங்கிரஸ்காரர்கள் தேபரை தமிழகத்திற்கு அழைத்தார்கள்.

தேபர் தமிழகத்திற்கு வந்த விபரத்தைச் சென்னை அரசியலார் பொது மக்களுக்கு அவ்வளவாகத் தெரிவிக்கவில்லை. தேபர் அழைக்கப்பட்டது காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் புத்திமதி கூறுவதற்குத்தான் என்ற முறையில் அவருடைய வருகை அமைந்திருந்ததை எவரும் மறுக்கமுடியாது.

தேபர் பேசினார். காங்கிரஸ்காரர்கள் காங்கிரசைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பேசினார். காங்கிரசின் சரித்திரத்தைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். காங்கிரஸ்காரர்களுக்கு, காங்கிரஸ் தலைவர் காங்கிரசைப் பற்றித் தெரிந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கிறார். அதோடு தேபர் நிறுத்திக் கொள்ளவில்லை. 'திராவிட முன்னேற்றக் கழகம் காலப்போக்கில் காங்கிரசில் சேர்ந்துவிடும்' என்றும் அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார். இதில் மறைந்து கிடக்கும் உண்மைப் பொருளை பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தி. மு. க. காங்கிரசில் சேர்ந்துவிடும் என்று பொதுமக்கள் மத்தியில் தெரிவித்திருந்தால் அதில் பொருளுண்டு. மக்களைத் திருப்புவதற்குத் தேபர் அவ்வாறு கூறியதாக நாம் எண்ணிக்கொள்ள வழி இருக்கிறது. ஆனால் தேபர் கூறியது காங்கிரஸ் முன்னோடிகளிடம்! காங்கிரஸ்காரர்கள் காங்கிரசைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று தொடக்கத்தில் தெரிவித்துவிட்டு, தி. மு. க. காங்கிரசில் சேர்ந்துவிடும் என்றால், என்ன பொருள்? காங்கிரசுக்குள்ளே பிளவு மனப்பான்மை ஏற்பட்டிருப்பதும், ஒரு சிலருக்கு திராவிட நாட்டுப்பற்று வளர்ந்திருப்பதும் தேபரின் சொற்பொழிவில் தொக்கி நிற்பதை தமிழ்நாட்டு அரசியல் வட்டாரம் நன்கு உணர்ந்திருக்கிறது.

''நீங்கள் காங்கிரசின் தியாகத்தைப் படியுங்கள்''

—இது, காங்கிரசைப்பற்றித் துளியும் தெரியாதவர்கள் காங்கிரஸ் எம் எல். ஏ.க்களாக வந்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது.

''தி. மு. க. காலப்போக்கில் காங்கிரசில் இணைந்துவிடும்''—

இது காங்கிரஸ்காரர்களுக்கு வேண்டுகோள் ''காங்கிரசை வெறுத்து நீங்கள் தி. மு. க.வில் சேர நினைக்காதீர்கள், தி. மு. க. காங்கிரசில் சேரப் போகிறது'' என்ற முறையில் தேபர் வெல்லம்போல் பேசி இருக்கிறார். மொத்தத்தில் தேபர் வருகை, காங்கிரசுக்குள் இருக்கும் பலவீனத்தை பகிரங்கமாகப் பறை சாற்றிவிட்டுப் போய்விட்டது. நாம் வளர்ந்திருக்கிறோம்.

சென்ற வாரம் கன்னட நாட்டில் நமது குரல் வானை முட்டி எதிரொலித்தது. கன்னடத்தில் பல பேர் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்திப் பேசினார்கள். நாற்பது சத விகித அளவில் கன்னட மக்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். கன்னடம் கருதிவிட்டது நாடு பிரிய வேண்டும் என்று. சென்ற வாரம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆந்திர மாநிலத்திற்குப் போயிருந்தார்கள். குண்டக்கல்லில் நடைபெற்ற ஒரு தமிழ் விழாவில் அண்ணா அவர்கள் பேசினார்கள். ஆந்திரர்கள் பலர் அண்ணாவை அணுகி ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வேறொரு மேடை போட்டு அதில் அண்ணா அவர்கள் தென்னாட்டின் வீழ்ச்சிபற்றி ஆங்கிலத்திலே பேசினார்கள். ஆந்திர நண்பர்கள் அண்ணா அவர்களைக் கூடிய விரைவில் பல இடங்களுக்கு அழைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திரமும் பிரிவினையை ஆதரிக்கத் தொடங்கிவிட்டது.

பிரிவினைக் கொள்கையைத் தமிழகத்தில் பூரணமாக பரவிடச் செய்துவிட்ட தலைவர் அண்ணா அவர்கள் இப்போது திராவிடத்தின் பிறமொழி மாநிலங்களுக்குச் செல்லத் தயாராகிவிட்டார்கள். தேபர் இப்போது, தி. மு. க., காங்கிரசில் சேர்ந்துவிடும் என்று அப்பாவிக் காங்கிரஸ்காரர்களுக்குத் தெரிவிக்கிறார். இந்த நேரத்திலேதான் கழகத் தோழர்களுக்கு அதிகமான பொறுப்பு வேண்டும்.

''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - என்பது, காங்கிரஸ்காரர்கள் கூறுவதுபோல் வெறும் அடுக்குமொழி அல்ல. கடமை என்பதும், கண்ணியம் என்பதும் கட்டுப்பாடு என்பதும் நமது இனத்திற்கே உண்டான பண்பாடுகள்.''

அண்ணா அவர்களின் இந்த வாய்மொழியை மனதில் கொண்டு வெற்றி முகப்பை எட்டிக்கொண்டிருக்கும் நமது இலட்சியத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கழகத் தோழர்களுடையதாகும்.

ஜூபிடர்
அண்ணா பத்தி
JUPITER PERFUMERS
CITY
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
★
எங்கும் கிடைக்கும்.

குஞ்சரத்தின் கதை

இருநூறு ஆண்டுகளுக்குமுன் தென்பாண்டி மண்டலத்தில் நிகழ்ந்த இனிய காதற் கதை இது

எஸ். எஸ். தென்னரசு

11

சிங்கப்பெருமாள் குழம்பினார். அவருடைய முகக் குறியை அல்லிவேலு உணர்ந்தான்.

"நீங்கள் என்னை நம்பலாம்; இப்போதே வேண்டுமானாலும் என்னுடன் ஆளை அனுப்புங்கள். நான் இடத்தைக் காண்பிக்கிறேன்." என்று திட்டவட்டமாகத் தெரிவித்தான் அல்லிவேலு. அம்பலகாரர் அல்லிவேலுவிடம் எல்லா விபரங்களையும் விசாரித்துகொண்டு அவனைக் கூடத்தில் அமரச் சொன்னார். அல்லிவேலுவுக்கு, தான் இந்த உண்மையைத் தெரிவித்துவிட்டதிலே திருப்தி கண்டான். மிகப் பெரிய துரோகத்திலிருந்து தான் தப்பித்துவிட்டதாகவே உணர்ந்தான். கம்பீரமாகக் கூடத்தில் அமர்ந்தான். வரும்போது இருந்த பீதி, கலக்கம், இப்போது இல்லை.

அம்பலகாரர் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கொல்லைப் பக்கமாகப் போனார். காவல்காரன் மாட்டுக்கு பருத்திக் கொட்டை வைத்துக்கொண்டிருந்தான்.

"டேய்!"

"எசமான்!"

"எங்க அந்தப் பையன்?"

"அந்திக்குப் பிறகு வர்றேனு சொல்லிப் போய்ட்டாருங்க!"

—சிங்கப்பெருமாள் சிலையானார். புருவம் துடித்தது. முகம் சிவந்தது. முகப்புப் பக்கம் திரும்பினார்.

"அல்லிவேலு!"

அல்லிவேலு இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு ஓடிவந்தான்.

"டேய் அல்லி, உன்னைப் பூரணமாக நம்புகிறேன். எனக்குத் துரோகம் செய்தால் உன் வாரிசையே அழித்துவிடுவேன். புறப்படு! உன்னோடு பத்துப்பேரை அனுப்பிவைக்கிறேன்! நல்ல முடிவோடு வா!', என்று சொல்லி 'அல்லி'யுடன் ஆட்களை அனுப்பிவைத்தார் அம்பலகாரர்.

அம்பலகாரருக்குத் தன் மகள் கிடைத்துவிடுவாள் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையே அவருக்குப் பெரு வெற்றியாகத் தோன்றியது. இழந்த கௌரவம், உடைந்த உள்ளம், உருக்குலைந்த உடல் எல்லாமே திரும்பிவிட்டதாக அவர் எண்ணினார். பாவம்! கௌரவம் என்பது பெரு மழையால் புரண்டோடும் வெள்ளமல்ல; தினசரி ஒவ்வொரு துளி வீதம் சேகரிக்கப்படும் தாமரைத்தடாகம் என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். அதனால்தான் இழந்த கௌரவம் கிடைக்கப் பெறுவதை எண்ணிப் பூரித்தார்.

★

பஞ்சவர்ணம், பிரான்மலை மலையடிவாரத்தைப் பிடிக்கும்போது இரவு வந்துவிட்டது. வழக்கம்போல் முள் பத்தை ஒன்றை எடுத்து தீயைப் பற்ற வைத்துக்கொண்டு மலையில் ஏறினான். கோயில் அமைதியாக இருந்தது. வௌவால்கள் படபடத்தன. எண்ணை நாற்றம் மூக்கைத் துளைத்தது. பஞ்சவர்ணத்திற்கு இதெல்லாம் பழக்கப்பட்டவை. கோயிலைக் கடந்து அவனுடைய புதருக்குள் போனான். உள்ளே விளக்கில்லை. கதவு மூடியிருந்தது. அருகில் சென்று கதவைத் தட்டினான். கதவு வெளியிலே பூட்டியிருந்தது. அந்த பூட்டில் திறவுகோலுமிருந்தது. திறந்து கொண்டு உள்ளே போனான். எல்லாப் பொருள்களும் வைத்தது வைத்தபடி இருந்தன. 'பஞ்சவர்ணம் போகும்போது குஞ்சரம் உடுத்தியிருந்த மேகவர்ணப்புடவை கொடிக் கயிற்றில் தொங்கியது. அவள் தாய் வீட்டிலிருந்து கட்டி வந்த புடவையைக் காணவில்லை. எத்தனையோ பேருக்குப் புதிராக விளங்கிய பஞ்சவர்ணத்திற்கு, குஞ்சரம் ஒரு புதிரைப் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

உணர்ச்சியற்றவனாய் இயந்திரத்தைபபோல் கதவைப் பூட்டிக்கொண்டு மலையிலிருந்து இறங்கினான். எதிரே, கொஞ்ச தூரத்தில் அல்லியும் அவனது கோஷ்டியும் வருவது தெரிந்தது. பஞ்சவர்ணம் ஒரு குண்டுப்பாறையின் மறைவில் ஒளிந்துகொண்டான். அல்லியின் கோஷ்டி நேராக கோயிலுக்குள் போய் குகையைப் பார்த்துவிட்டுத் திரும்பியது. அந்தக் கோஷ்டியிடம், போகும்போது இருந்த குதூகலம், துடிப்பு, வரும்போது இல்லை. அல்லியின் கைகளைப் பின்பக்கமாகக் கட்டி இழுத்து வந்தார்கள். கோஷ்டியின் தலைவன் கர்வத்தோடு பேசினான்:

"அல்லி, உனக்கு அழிவு காலம் வந்துவிட்டது. அம்பலகாரரை ஏமாற்றியவர்கள் இதுவரை தப்பித்தது இல்லை. இனி நீ தப்புவதற்கு மார்க்கமில்லை. உன்னை இவ்வாறு இழுத்துப் போகிறேனே என்று என்மீது வருத்தப்பட்டுப் பயனில்லை. அம்பலகாரர் எத்தனையோ பேருக்கு வாழ்வு கொடுத்திருக்கிறார். எத்தனையோ பேர் அவரிடமிருந்து ராஜதந்திரம் கற்றுப் போயிருக்கிறார்கள். ஆனால் நீ உன்னுடைய சக்தியைச் சரியாக எடைபோட்டுப் பார்க்காமல் கெட்டுப் போய்விட்டாய். அல்லி, சாகப்போகும் போதாவது ஒரு உண்மையைத் தெரிந்துகொண்டு கண்களை மூடு. சதி எப்போதும் வென்றது இல்லை. இடிக்கு முந்திய மின்னலைப் போன்றது அது. சிறிது வெளிச்சம் கொடுக்கும். அந்த வெளிச்சம் மறையுமுன் இடி விழுந்துவிடும். நீ அந்த இடிக்குப் பலியாகிவிட்டாய். தனக்கும் தன் இருதயத்திற்கு மட்டுமே தெரிந்து சதியைச் செய்தவர்கள் தங்களைப் பொறுத்தவரையில் வெற்றிபெற வழி இருக்கிறது. ஆனால் கூட்டுச்சதி வெற்றி பெறவே முடியாது. தெரிந்துகொள்! இம்! நட!' என்று அந்தத் தலைவன் உபதேசம் செய்துகொண்டு போனான்.

அந்தக் கோஷ்டி மறைந்த பின்பு பஞ்சவர்ணம்வெளியேறினான்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு அன்று பஞ்சவர்ணம் அவன் இல்லத்திற்குப் போனான். அவனது சொந்த ஊர்க்காரர்களுக்கு அவன் விருந்தாளியாகவே தெரிந்தான். ஆடுவதும், பாடுவதும் அயலூர்களுக்கு ஓடுவதுமாகவே இருந்த அவனை வெளியூர்ப் பிரஜையாகவே எல்லோரும் கருதினார்கள். ஒரு கிராமத்தில் ஒரு நல்லவரைத் தெரிந்து வைத்திருக்கிற அளவுக்கு தீயவரையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் இரண்டும் கெட்டவர்கள் யாருடைய நினைவுக்கும் வருவதில்லை. சிங்கம் புகழப்படும்போதெல்லாம் சிறு நரி இகழப்படுகிறது. கோட்டான் பரிகசிக்கப்படும்போதெல்லாம் குயிலின் குரல் ஏற்றிப் பேசப்படுகிறது. விலங்குகளில் கரடியோ, முள்ளம்பன்றியோ, பறவைகளில் கள்ளிக்குருவியோ கழுகோ யாராலும் அதிகம் பேசப்படுவதில்லை.

வீட்டிலே அவன் தந்தை பனையோலை விசிறியால் விசிறிக்கொண்டிருந்தார். அவரருகில் திரி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பஞ்சவர்ணம் உள்ளே நுழைந்ததை அவர் பார்த்தார். எதுவும் பேசவில்லை. பஞ்சவர்ணம் நேராக உள்ளே போனான். என்னதான் ஊர் சுற்றியாக இருந்தாலும் பெற்ற அன்னைக்குப் பிள்ளை மேலுள்ள அன்பு குறைவதில்லை. இருபது வயதான பிறகுகூட. ஈறும் பேனும் இருக்கிறதா என்று மகன் தலையைப் பிரித்துப் பார்க்கும் தாய்...மை தமிழகத்திற்கே கிடைத்த புதையல் சொத்து.

"வாடாப்பா, எவ்வளவு சம்பாதிச்சுக்கிட்டு வந்தே! என்னதான் உத்தியோகமோ தெரியல்லே! எல்லாம் என் தலைவிதி! ஒன்னைப் பெத்ததுக்கு ஒரு பொண்ணைப் பெத்திருந்தா வீடும் விளக்குமா இருப்பா" என்று அன்னை தங்கம்மாள் வார்த்தைகளைத் தொடுத்துக்கொண்டே போனாள். பிள்ளையின் குறையை கோபமாக எடுத்துரைக்கும்போதுகூட அன்னையின் விழிகள் நனைகின்றன. புடவைக் குஞ்சத்தால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். உள்ளே போய் ஒரு வாழை இலையை எடுத்து வந்து விரித்துப் போட்டாள். தண்ணீர் தெளித்தாள். உணவுபரிமாறினாள். இலை யாருக்கு என்று அவனும் கேட்கவில்லை; சாப்பிட்டாயா—என்று அந்த அன்னையும் கேட்கவில்லை. இதைத்தான் பாசத்தின் நுணுக்கமான உச்சக்கட்டம் என்கிறார்கள் போலும்!

பஞ்சவர்ணம் இலையில் அமர்ந்தான். அவனை நிமிர விடாமலே அன்னை பரிமாறினாள்.

நாழிகைக் கணக்கிலே நேரம் கிடைத்தாலும், அப்போதெல்லாம் சாதிக்கமுடியாத காரியங்களை, கணவன் சாப்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும் கால்நாழிகையில் மனைவி பல காரியங்களுக்கு அவனிடம் அனுமதி கேட்டுவிடுகிறாள். அதைப் போல் எத்தனையோ வயோதிகத் தாய்மார்கள் வாலிப மைந்தனிடம் காரியம் சாதித்துக்கொண்டு விடுகிறார்கள்.

"பஞ்சு!"

"இம்!"

"எத்தனை நாளைக்கு இப்படி இருப்பது?"

"எங்காவது தீர்த்தமாடப் போக வேண்டும் என்கிறீர்களா? நன்றாகப் போய் வாருங்கள். நான் வேண்டுமானால் வீட்டைப் பார்த்துக்கொள்கிறேன்." என்றான் பஞ்சவர்ணம்.

"என்னடா பஞ்சு, கேலிபண்றதுக்கு முறை கிடையாதா?"

"நீங்க என்னம்மா சொல்றீங்க. என்னை எங்கேயாவது சம்பாதிக்கப் போகச் சொல்றீங்களா?"

"இல்லை தம்பி, நம்ப சொந்தக்காரப் பிள்ளைங்களுக்கெல்லாம் கல்யாணம் ஆயிடுச்சு. நீ மட்டுந்தான் பாக்கி. ஊரிலே இருக்கிறவங்க என்ன நெனைச்சுக்குவாங்க? ஒரே புள்ளே, அதுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணக்கூட யோக்யதை இல்லே என்பாங்க."

"அபபடிச் சொல்றவங்க, நான் மணவரையிலே இருக்கப்ப என்ன சொல்லுவாங்க தெரியுமா?"

"என்ன சொல்லுவாங்க?"

"நாடோடிமாதிரி ஊர் சுற்றிக்கொண்டு திரிகிற இவனுக்குப் பெண் கொடுத்த அப்பாவி யாரு என்பார்கள்"—என்றான் பஞ்சவர்ணம்.

இப்போது வெளியிலே இருந்த அவன் தந்தை அவிழ்ந்த கொண்டையை இறுகக் கட்டிக்கொண்டு உள்ளே வந்தார்.

"தங்கம், இதெல்லாம் அவனிடம் ஏன் பேசணும்? ஒன்னாலேதானே அவன் கெட்டான். நீ கொஞ்சிக்கிட்டே இருந்தே அவன் மிஞ்சிக்கிட்டுப் போய்ட்டான். எல்லாம் என் தலையிலே வந்து விடியிது! ஒரு பொண்ணைப்பாத்து கட்டுடா தாலியின்னு சொன்னா மீறுவானா அவன்!" என்று அவர் அபிநயம் பிடிக்க ஆரம்பித்தார்.

"இப்ப நீங்க ஏன் குதிக்கிறீங்க. புள்ளே எப்பவாவது வீட்டுக்கு வர்றான், சாப்பிடக்கூட நீங்க விட மாட்டேங்கிறீங்க. தம்பி ராத்திரிக்கெல்லாம் இங்கேதான் இருக்கப் போறான். எல்லாம் கேளுங்க. முதல்லே நீங்க வெளியிலே போயி உக்காருங்க!" என்று தன் கணவனைக் கெஞ்சி அனுப்பினாள் தங்கம்மாள்.

★

சிறுகூடல்பட்டியில் கண்ணம்மாவின் தந்தை துரும்பாக இளைத்துக் கொண்டு போனார். பித்துப் பிடித்தவரைப்போல் வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்திருந்தார். தாடி, மீசை வளர்த்து ஆறு மாத காலமாகப் படுத்த படுக்கையில் கிடப்பவரைப் போல் தோன்றினார். அவருக்கு அல்லும் பகலும் கண்ணம்மாவின் நினைவுதான். கொல்லும் மன வியாதியைத் தீர்க்க உலகத்தில் வேறு மருந்தில்லை என்பதைத் தெரிந்த அவர் யாரிடமும் மருத்துவத்திற்குப் போகவில்லை.

- தொடரும் -

- 23 -

"சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சாதல் திருமணத்தைப்பற்றிக் கதை கதையாகப் பேசுகின்றன. அவர்கள் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சியினை விவரித்து அகநானூற்றில் இரண்டு பாடல்களில் பேசப்படுகின்றது. அந்த இரண்டு பாடல்களிலும் இன்றைய தினம் இருக்கும் சடங்குகள் ஏதும் குறிக்கப் பெறவில்லை என்பதனைக் காணலாம். ஊரில் பெரியவர்களாக வாழுகின்றவர்களும், உற்றவரில் சிறந்தோராக இருப்பவர்களும், வாழ் வாங்கு வாழும் மகளிரும் கூடி 'வாழ்க வாழ்க' என வாழ்த்தி ஒருவனையும் ஒருத்தியையும் கணவனும் மனைவியுமாக்கினர் என்றுதான் அங்கு நாம் காணுகின்றோம். அந்தப் பாடல்களில் திருமணச் செய்திகளில் ஒன்றையும் விடாமல் குறித்திருக்கின்றனர். பந்தல் எப்படிப் போடப்பெற்றிருந்தது, அதிலே என்னென்ன ஒப்பனைகள் செய்தனர், கீழே மணல் பரப்பினர், என்று இதனையெல்லாம் சொல்லி, விருந்தினர்க்கு உளுந்து இட்டு சமைக்கப் பெற்ற 'கொழுங்களி' தந்தனர் என்பதும்கூட காணப்படுகின்றது. 'வெண் பொங்கல்' வழங்கி திருமணம் செய்தார்கள் என்றிருக்கிறது. ஆனால் புரோகிதர் வந்து சடங்கு நடத்தினர் என்று இல்லை. என்ன இருந்தாலும் புரோகிதர் வெண் பொங்கலைவிட உயர்வானவர்தான்! புரோகிதர் இருந்திருந்தால் வெண்பொங்கலைப்பற்றிச் சொன்னவர் புரோகிதரையும் சொல்லியிருப்பார். அப்படிச் சொல்லாததிலிருந்து அன்றைய தமிழன் திருமணத்தில் புரோகிதர் இடம் பெறவில்லை என்பதை உணருகின்றோம்.

"இதுவும் எப்போது நடைபெற்றது என்றால் சிலர் காதலித்த போது காட்டிய உறுதியை வாழ்க்கையில் காட்டாமல் எளிதில் ஏமாந்த பெண்களை ஏய்த்து விட்டுப் போயினர். அதற்குப் பிறகுதான் பெரியவர்கள் கூடி இந்த முறையை மேற்கொண்டனர். 'பொய்யும் வழுவும் புகுந்த பின்னர் ஐயர் யாத்தனர் கரணம்' என்கிறார் தொல்காப்பியர். ஐயர் என்றால் சாதி ஐயரை அல்ல, உயர்ந்தவரை, சான்றோரை, பெரியவரைச் சொல்கிறார்.

"இதனையெல்லாம் நான் உங்களிடம் சொல்லுவதன் காரணம் என்னவாக இருக்குமோ என நீங்கள் நடுங்கிக்கொண்டிருக்க வேண்டாம். வேறு இடங்களில் சொல்லிக் கொண்டிருப்பதைவிட உங்களிடம் சொன்னால் பயன் விளையும். ஏன் எனில் உங்களில் பல பேருக்கு இந்த விடுமுறையில் திருமணம் நடைபெறக்கூடும். சில பேருக்கு முன்னமே நடந்திருக்கக்கூடும். அவர்கள் நீங்கமற்றவர்கள். திருமணத்தை இந்த முறையில் தமிழர் முறையில் நடத்திக்கொள்ள வேண்டும் என்ற வேட்கை உங்களிடம் எழச் செய்வதற்குத்தான் நான் இதனைக் குறிப்பிடுகின்றேன். ஆகவே விடுமுறையில் நீங்கள் பெண்ணைப் பார்க்கின்றபோது அவள் செய்த விருந்தின் சுவையையும், அவள்மேல் இருக்கும் நகையின் சுமையையும், பெண்ணின் வண்ணத்தையும் பார்த்து 'சரி' என்று தலையாட்டுவதற்கு முன்னே, "தமிழ்த் திருமணமா? என்று கேட்டுத் தலையாட்டுங்கள்" என்றார். மாணவர்களிடையே மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த சலசலப்பு எழுந்தது. மணி அடித்து அடுத்த வகுப்புக்குப் போகும் வரையிலும் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். மற்றவர்களின் நெஞ்சங்களில் இந்த உரை என்ன பயன் விளைத்ததோ நாம் அறியோம். ஆனால் ஞானசம்பந்தனின் நெஞ்சம் இந்த உரையைப் பதிந்து கொண்டது.

தமிழாசிரியர் அ. சொன்ன முறை நல்ல முறை என்றாலும் அதைத் தன் தந்தை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும். தன் தந்தை ஒருவேளை மனம் மாறுபட்டாலும் தாயின் மனம் அந்த அளவுக்கு மாறுதல் அடையாது என்பதை அவன் உணருவான். எத்தனையோ நாட்களாக சிவகாமி அம்மாள் மகனுக்குநலங்கு வைப்பதைப் பார்க்க வேண்டும் என்று காத்திருந்தவர்கள் ஆயிற்றே. அவ்வளவு எளிதில்சடங்குகளை விட ஒருப்படுவார்களா என்ன? தன் மீது வைத்திருக்கும் அன்பினாலும், தன் திருமணக் கோலத்தைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தினாலும் எப்படியாவது தாயும் தந்தையும் ஒத்துக்கொண்டாலும் ஊரவர், உறவினர் வந்து தடுப்பார்கள் என்பதை ஞானசம்பந்தன் அறிவான்.

புதிய திருமண முறைக்கு இத்துணைத் தடைகள் இருக்கின்றனவே என்று எண்ணியபோது நல்லதற்கும் இவ்வளவு இடையூறுகளா என்று வருந்தினான். ஆனால் மறுகணம் தன்னலம் வந்தபோது அந்த வருத்தம் ஓடி மறைந்தது. எப்படியாவது தன் திருமணம் தடைப்பட வேண்டும் என்று விரும்பியவன் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினான்.

உடனே பெரியசாமிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டான். தன் திருமணம் நடைபெறுவதாய் இருந்தால் புரோகிதர் கூடாது என்று எழுதியிருந்தான். அதைப் படித்தவுடன் பெரியசாமி கோபம் கொண்டார். இதற்குத்தானா இவனைப் படிக்க வைத்தது என்று திரும்பத் திரும்பக் கேட்டார். போக்கிரிப் பயல் என்றார். "ஏன் இவ்வளவு கோபம்?" என்று சிவகாமி அம்மாள் கேட்டதற்கு "பின்னே என்ன உன் பிள்ளை போகாத ஊருக்கு இல்லாத வழியைச் சொல்லுகின்றான்" என்றார்.

சிவகாமி அம்மாளுக்கு அந்தக் கவலையெல்லாம் ஒன்றும் இல்லை. தன் மகனுக்கு திருமணம் முடிந்து மருமகள் வீட்டுக் கூடத்தில் விளக்கு ஏற்றி வைக்க வேண்டும் என்ற ஆசைதான் மேலேழுந்து நின்றது. அதனால் அவர்கள் "என்னமோ போங்கள். மூன்று முடிச்சு போட்டால் சரிதான்" என்று சொல்லிவிட்டு அந்த அம்மாள் அடுப்பில் பொங்கிய பாலை இறக்கி வைக்கப் போய்விட்டார்கள்.

ஆனால் பெரியசாமியோ நெடுநேரம் அதைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார். இப்படி ஒரு வெடி குண்டைத் தூக்கித் தலையில் போடுவான் என அவர் துளியும் எதிர்பார்த்தவரல்லர். என்ன செய்வது என்று அறியாதவராய்க் கீழும் மேலும் பார்த்துக் கலங்கிக்கொண்டிருந்தார்.

புரோகிதர் வந்தால் பையனோ திருமணம் வேண்டாம் என்கிறான்; புரோகிதர் இல்லாமல் திருமணம் என்றால் அவருக்கோ ஒன்றும் விளங்கவில்லை. இதைப்போல் ஒன்றும் செய்யத் தோன்றாத வேளைகளில் அவர் மணிவண்ணனைக் கலந்து என்ன செய்யலாம் என்று கேட்டு அதன்படி நடப்பது உண்டு. இன்றும் அவர்தான் வழிகாட்ட வேண்டும் என்று தீர்மானித்தவராய் மணிவண்ணனின் இல்லத்தை நாடிச் சென்றார்.

அவரிடம் நெடுநேரம் கலந்து பேசிய பிறகு மறுநாள் மணிவண்ணனும் எழிலனும் நேரே சென்னைக்குப் போய் ஞானசம்பந்தனின் மனத்தை மாற்றுவது என்று முடிவு செய்துகொண்டு எழிலனிடமும் 'நாளை சென்னை போகவேண்டும், காலையில் தயாராக இரு' என்று சொல்லிவிட்டு வந்தனர்.

★

இரவெல்லாம் உறக்கம் அற்றவனாய் கலைந்த தலையும், தளர்ந்த நடையும் சோர்ந்த உள்ளமுமாக ஞானசம்பந்தன் மாணவர் விடுதியை நோக்கி வந்துகொண்டிருந்தான். நெடு நாட்களுக்குப்பின் அமுதவல்லியைக் காணச் சென்றான். காணாத நாட்களின் கதையெல்லாம் பேசினர். பேசாத பேச்சையெல்லாம் பேசினர். நேரம் போனதே தெரியாமல் விழித்திருந்து விடியற்காலையில் கொஞ்சம் கண் அயர்ந்தான். இதற்குள் அருணாசலம் தடதட எனகதவைத் தட்டினான். "என்ன?" என்றாள் அமுதவல்லி உள்ளிருந்தபடியே.

"ஐயாவைக் கொஞ்சம் கூப்பிடு" என்றான்.

"அவர் நன்றாகத் தூங்குகின்றாரே"

"எழுப்பேன்" என்றான் அவன்.

எழுப்புவதா வேண்டாமா என்று அமுதவல்லி தயங்கிக்கொண்டிருக்கும்போது ஞானசம்பந்தனே "என்ன அங்கே" என்று கேட்டவாறு எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தான்.

வெளியிலிருந்து அருணாசலம் "ஒன்றும் இல்லை ஐயா. ஒரு சின்ன சேதி" என்று இழுத்தான்.

"என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஞானசம்பந்தன் வெளியில் வந்தான்.

"ஹி... ஹி... ரொம்ப அவசரமான செலவு வேறு வழியே இல்லை. நீங்கள்தான் உதவ வேண்டும்"

பத்தோ இருபதோ கொடுத்துத் தொலைக்கலாம் என ஞானசம்பந்தன் "எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒரு ஐந்நூறு ரூபாய்"

"என்ன?"

"ஐந்நூறுதான்?"

"ஐந்நூறுதானா?

"ஆமாம்

"என்ன ஆமாம்?"

"ஐந்நூறுதான். அவசரமாகத் தேவை. நான் வேறு யாரைக் கேட்பேன்" என்று குழைந்தான் அவன்.

ஞானசம்பந்தனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சின்ன தொகையாகக் கேட்டால் கொடுத்துத் தொலைக்கலாம் என்றுகூட எண்ணியிருந்தான். ஆனால் அவனோ ஐந்நூறு கொண்டு வா என்று ஆணையிடுகின்றான். கொடுக்கலாம் என எண்ணினாலும் வழி புலப்படவில்லை. கீழும் மேலும் பார்த்தான். "உடனே தேவையா" என்றான். "ஆமாம்" என்றான் அவன். "இரண்டு நாள் பொறுத்துத் தரலாமோ?" என்றான். "சரி" என்று ஒப்பினான். ஏதோ பேழையில் வைத்துப் பணத்தைப் பூட்டியிருப்பதுபோலவும் இரண்டு நாட்களில் திறவுகோலைத் தேடி எடுத்துப் பூட்டு திறந்து பொன் எடுத்து எண்ணித் தருவதுபோலவும் இரண்டு நாள் தவணை கேட்டான். அந்த இரண்டு நாட்களில் எப்படியாவது கொடுத்துவிடுவான் என்று அருணாசலமும் நம்பியவனாய் ஒன்றும் பேசாமல் போய்விட்டான்.

அவன் போனபின் ஞானசம்பந்தனின் மனம் ஒரு நிலையில் இல்லை. தூக்கம் இன்னமும் தீரவில்லை எனினும் அமுதவல்லி கொண்டு வந்து கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு "நான் போய் வருகின்றேன்" என்று அவளிடம் சொல்லிவிட்டு விடுதிக்கு வந்தான். விடுதியின் அருகில் வரும்போதே தன் அறைக்கெதிரே இரண்டு மூன்று பேர் நின்றிருந்ததைக் கண்டான்.

தொடரும்

வெண்பாப் போட்டி-17.

ஈற்றடி:

கலைகடந்து தோன்றுதே கால்.

முடிவு தேதி 17-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

புவியரசும் கவியரசும்!

படித்தவர்கள், பணக்காரர்கள், பாராளும்மன்னர்கள்—இம்மூன்று பிரிவினருக்கும் உலகில் நிலையான சிறப்புண்டு. கல்வியின் பெருமையைச் சொல்ல வேண்டுமா? கண்ணைத் திறந்துவிடுவது கல்வி. உலகின் முன்னேற்றத்திற்கு வழி விடுவதும் கல்வியே. வையகம் நாளும் செழித்து வாழ்வதும் கல்வி பெற்ற நல்லாராலேயே. படித்தவர்களின் சிறப்பை இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

கல்விச் செல்வம் ஒருபோதும் குறைவதில்லை; பிறருக்கு வழங்க வழங்க அது பெருகுகிறது; வெள்ளத்தாலோ, வெந்தணலாலோ அது அழிவதில்லை;

கல்வி மனிதனைத் திருத்துகிறது; மேம்பட்டவனுக்குகிறது. ‘கற்றவன் உண்பான் பெற்றவளும் உண்பாள்’ என்னும் பழமொழிக்கேற்ப, கல்வி வாழ்வுக்கு வழி செய்கிறது.

பணக்காரர்களின்சிறப்புஎன்ன? உலகில் கண்கண்ட தெய்வம் பணம். பணத்திற்கு முன் மற்ற சிறப்புகள் அனைத்துமே தாழ்ந்து விடுகின்றன ‘இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல்லும்’ என்னும் பாட்டு பணத்திற்குள்ள மகிமையை அப்பட்டமாக உரைக்கிறது. ‘ஏழை சொல் அம்பலம் ஏருது, என்னும் பழமொழி தெரிந்ததே. பணத்திற்கும் பணக்காரர்களுக்கும் அன்று முதல் இன்றுவரை உலகில் பெருஞ் சிறப்பு நிலவி வருகிறது; இச்சிறப்பு என்றும் இருந்து வரும்.

இனி அரசனை எடுத்துக்கொள்வோம். அவன் நாட்டை ஆளப் பிறந்தவன். அரசனுக்கு ஆளும் உரிமை காரணமாக எல்லோரையும் ஏவல் கொள்ளும் அதிகாரம் உண்டு. அரசனின் ஆணைக்குமுன், படித்தவன், பணக்காரன் எல்லோருமே பணிய வேண்டியதுதான். நாட்டில் அவன் வைத்ததுதான் சட்டம். ‘அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி’ ‘மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’ என்னும் வரிகள் மன்னர்களின் தலைமைச் சிறப்பை இயம்புபவை.

ஔவை மூதாட்டி மன்னனையும் புலவனையும சீர்தூக்கிப் பார்க்கிறார். எவருக்கு முதற் சிறப்பு அளிக்கலாமென்று சிந்திக்கிறார். சிறப்பில் மிக்கவன் மன்னனா, புலவனா என்று ஆராய்கிறார். அவர் கண்ட முடிவுதான் என்ன?

மன்னனைவிடக்கற்றோனே சிறப்பு மிக்கவன் என்று ஔவைப் பாட்டியின் புலமையுள்ளம் தீர்ப்புரைக்கிறது.

தம் முடிவுக்குக் காரணமும் சொல்கிறார் நம் தமிழ்ப்பாட்டி.

மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்
புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை;
கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு
(26)

ஒரு நாட்டிற்கு மன்னனே தலைவன் என்பதையோ, அந்த நாட்டில் மன்னனை மிஞ்சும் பெருமையும் சிறப்பும் வேறு எவருக்கும் இல்லையென்பதையோ மூதுரை மறுக்கவில்லை. மன்னன்தான் ஆளும் நாட்டிற்கு ஈடு இணையற்ற தலைவன். அங்கே அவனுக்குமுன் படித்தவரோ, பணக்காரரோ, மற்றும் எவருமோ செல்வாக்கோ,சிறப்போ பெறமுடியாது. முதற் சிறப்பு ஆளும் அரசனுக்குத்தான். முதல் மரியாதையும் அவனுக்கே! அவன் கட்டளைக்குப் பணிந்தே கற்றோர் முதலிய அனைவரும் நடந்தாக வேண்டும்.

ஒரு நாட்டெல்லைக்குள் பார்க்கும் போது அரசனுக்கே தலைமைச் சிறப்பு இருப்பதைக் காணுகிறோம். அங்கே புலவனுக்கும் அரசனுக்கு அடுத்த நிலைதான்.

நாட்டெல்லைகடந்த ஒரு வேற்று நாட்டில் அரசனின் நிலை என்ன? புலவனின் நிலை என்ன? அங்கே அரசன் எவ்வாறு மதிக்கப்படுவான்? கற்றோன் எவ்வாறு போற்றப்படுவான்?

அரசனின் சிறப்பெல்லாம்அவன் ஆளும் நாட்டோடு சரி, படித்தவன் சிறப்போ வேற்று நாட்டிலும் செல்லுபடியாகக் கூடியது. புலவனையும் அறிவாளியையும் பிற நாட்டவரும் விரும்பி ஏற்பர், அவர்க்ளுக்கு மரியாதை செய்வர், ஏற்றுப் போற்றுவரென்பதே ஔவையார் சுட்டிக் காட்டுகிற உண்மை.

‘கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு’ இவ்வரியைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாருங்கள். மிகப் பெரிய உண்மையை உள்ளடக்கியிருக்கிறது இவ்வரி. உலகம் உள்ளவும் நிலைத்திருக்கக்கூடிய பேருண்மை இது.

அரசனுடைய ஆட்சியும் அதிகாரமும் குறிப்பிட்ட எல்லைக் கேட்டுக்குள் நின்றுவிடக்கூடியவை; பணத்தின் மதிப்புக்கூட அந்தந்த நாட்டோடு சரி. ஆனல் கல்வி அத்தகையதன்று. அதற்கு எங்கும் எவ்விடத்தும் வரவேற்புண்டு.

பழந்தமிழ் நாட்டில் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்செல்ர இரும்பொறை என்னும் சேர மன்னன் ஒருவன் இருந்தான். அவனைக் காண மோசிகீரனார் என்னும் புலவர் வந்தார். அவர் வந்தபோது அரசன் அரண்மனையில் இல்லை.

அங்கு சேரனுடைய முரசு வைக்கப்படுகின்ற முரசுகட்டில் காலியாக இருந்தது. புலவருக்கு வழி நடந்து வந்த களைப்பு. ஓய்வெடுக்க எண்ணிய புலவர் மோசிகீரனாருக்குக் காலியாக இருந்த கட்டில் வரவேற்புக் கூறியது. அதிலே படுத்தார் அடைந்தார்.

அரசு கட்டிலுக்கு அடுத்த சிறப்பு முரசு கட்டிலுக்கே. முரசு வைக்கப் படும் கட்டிலில் கை அல்லது கால் கூடத் தவறியும் படக்கூடாது. அப்படிப் பட்டுவிட்டால் அந்தக் காலையும் கையையும் வெட்டிவிடுவர். அதுதான் தண்டனை. முரசு கட்டிலுக்கு அத்துணை உயர்ந்த இடம் தந்து வந்தனர் அக்கால மன்னர்கள்.

மோசிகீரனார் இதனை அறியாது கட்டிலில் படுத்து உறங்கிப்போனார் வெளியே சென்றிருந்த மன்னன் வந்தான். முரசு கட்டிலில் யாரோ படுத்திருப்பதைக் கண்டதும்அவன் கை, வாளை உருவியது. அருகே நெருங்கியபோதுதான் முரசுகட்டிலில் உறங்குபவர் பெரும் புலவர் என்பதை அறிந்தான். உடனே வாளை உறையில் போட்டான். மயில்தோகை விசிறி எடுத்து வந்து அவருக்கு வீசத் தொடங்கினன்.

விழித்தெழுந்த புலவரை அரசனின் செய்கை மெய்சிலிர்க்க வைத்தது. முரசு கட்டிலில் படுத்ததற்குத் தண்டனை சிரச்சேதம். அதனைத் தருவதற்குப் பதில் மன்னன் தனக்கு மயில்தோகை கொண்டு வீசுகிறான். ‘தமிழ் கற்றதாலன்றோ தனக்கு இச்சிறப்பு’ என்றுபூரித்துப் போகிறார் புலவர் பெருமான் மோசிகீரனார்.

கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்னும் உண்மையை இந்நிகழ்ச்சி அருமையாகக் காட்டுகிறது.

மோசிகீரனாருடைய புலமை அவருக்கு எத்துணைச் சிறப்பைத் தேடித் தந்துவிட்டது! முரசுகட்டிலில் வேறு எவரும் படுத்திருந்தால் தலை போயிருக்கும். ஆனல் மோசிகீரனாரின் உயிருக்கு ஆபத்து ஏதும் நேரவில்லை. சிறுதண்டனையேனுக் மன்னர் தந்திருக்கலாமல்லவா? அவ்வாறும் நிகழவில்லை. அதற்கு மாருகப் புலவர் அயர்ந்து தூங்க மன்னன் விசிறி எடுத்து வீசுகிறான். எத்துணைப் பெருமை! எத்துணைச் சிறப்பு!

கற்றோருக்கு உயிருள்ள காலத்தும் புகழ்; மறைந்த பின்னரும் புகழ்; தாம் பிறந்த நாட்டில் மட்டுமன்று, உலகமெங்குமே புகழ்.

உயர்தமிழ்ப் புலவர்களான கம்பனையும் வள்ளுவனையும் எண்ணிப் பாருங்கள். ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாரதி பாடி மகிழ்கிறார். வள்ளுவனைத் தமிழ்நாடு மட்டும் எப்படி உரிமை கொண்டாடமுடியும்? அவன் உலகுக்கே உரியனாகிவிட்டான்.

வள்ளுவனுக்குச் சிறப்பு தமிழ் நாட்டோடு நின்றுவிடவில்லை;வையகமெல்லாம் அவன் சிறப்பு நின்று நிலவுகிறது. ‘கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு’ என்பது எத்துணை அரிய உண்மை!

ஆங்கிலநாட்டுப் புலவன்ஷேக்ஸ்பியரை எடுத்துக்கொள்ளுங்கள். அவனுடைய விழாவை இங்கிலாந்தில் மட்டுமா கொண்டாடுகிறார்கள்? உலகமெங்குமே ஷேக்ஸ்பியர் விழா நடைபெறுகிறது. ரஷ்யாவில்கூட அப்பெரும் புலவரின் இலக்கிய விழா கொண்டாடப்படுகிறது. கற்றோரின் சிறப்புக்கு நாட்டெல்லை இல்லை என்னும் உண்மையையே நாம் இதன்மூலம் அறிகிறோம்.

கற்றோரான விஞ்ஞானிகளின் நிலையும் இதுதான். ரயில் கண்டு பிடித்தவர்கள், மின்சாரம் கண்டவர்கள், வானொலியை உருவாக்கியவர்கள், வானவூர்தியை இயங்க வைத்தவர்கள் இவர்கள், எல்லாரும் தாம் பிறந்த நாட்டுக்கு மட்டுமே உரியவர்களா? அவ்வாறு கூறினல் உலகம் ஒப்புமா? உலக நாடுகள் அனைத்திலும் போற்றிப் புகழும் சிறப்புக்கு உரியவர்கள் அல்லவா இவர்கள்! மன்னர்களுக்கு இல்லாத எல்லைகடந்த பெருஞ் சிறப்பு கற்றோராகிய மேதைகளுக்கு உண்டு.

அரசுரிமை பெரும்பாலும் பரம்பரை உரிமையாகும். அரசன் மகன் அரசன். பிறப்புரிமையாலேயே அரசர்களுக்கு ஆளும் வாய்ப்பு தரப்படுகிறது. அரசர்க்கு வேறு தகுதிக்ள் பார்க்கப்படுவதில்லை.

கற்றோர்க்கு இந்நிலை இல்லை. அவர்கள் தாம் தேடிப் பெறுகின்ற தகுதியாலேயே சிறப்புப் பெறுகின்றனர். இந்தியாவில் மருத்துவம் பயின்ற ஒருவருக்கு அவர் தகுதி காரணமாகவே வேலை தருகிறோம். மலேயாவில் புகழ் பெற்ற நூலாசிரியருக்கு அமெரிக்காவில் வரவேற்புக் கிடைக்கிறது. ஆஸ்திரேலிய மேதையைச் சிங்கப்பூர் அரசினர் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். கல்வித் தகுதிக்கு எந்நாட்டிலும் மதிப்பு உண்டு என்பதற்கு இவை சான்றுகள்.

அரசரோ தாம் ஆளும் நாட்டை விட்டு வேற்று நாட்டில் தம் அதிகாரத்தைச் செலுத்தமுடியாது; பிற நாட்டினர் அவர் ஆணைக்குப் பணியமாட்டார். அங்கு அவர் சாதாரண மனிதராகவே கருதப்படுவார்.தனிச் சிறப்பு ஏதும் அந்நாட்டில் அவருக்கு நல்கப்படமாட்டாது.

கற்றவர்களைப் பொறுத்து இந்நிலை முற்றும் மாறுபடுகிறது. அவர்களுக்குச் செல்லும் நாடுகளில் எல்லாம் சிறப்பும் வரவேற்பும் உண்டு.

செயற்கைச் சந்திரனை வானில் பவனி வரச் செய்த சோவியத் விஞ்ஞானிகளை உலகமே புகழ்கிறது. எல்லா நாட்டு மக்களுமே அவர்களைப் பெருமையாகப் பேசுகிறார்கள். அதுபோன்ற பெருமையும் சிறப்பும் ரஷ்யாவை ஆளும் தலைவர்களுக்கும் கிடைக்குமா? ஒரு போதும் கிடைக்காது.

கற்றோர்க்குப் பிறந்த நாட்டிலும் சிறப்பு; பிற நாடுகளிலும் சிறப்பு. உயிருள்ள காலத்திலும் சிறப்பு; உயிர் நீங்கிய பின்னரும் சிறப்பு; கற்றோரின் சிறப்பு காலத்தை வென்று நிற்கக்கூடியது.

‘கற்றவனுக்கு எந்தநாடும்சொந்த நாடு; எந்த ஊரும் சொந்த ஊர்’ என்று கூறுகிறது திருக்குறள். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் சிறப்பு படித்தவருக்கே பொருந்தும்.

தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் நம் தம்பி தங்கைகள் கல்வியின் இம் மாபெரும் சிறப்பை மனத்திற் கொள்ள வேண்டும். ஒருநாட்டிற்கு மட்டும் உரியர்களாக வாழ்வது

— அடுத்த பக்கம் —

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

விசையை அமைத்தோம். வேண்டும் போது விசையைத் தட்டினுல் விளக்கு எரிகிறது.

இதைப்போல, கம்யூனிசம் என்றுல் என்ன? அது ஒரு தத்துவம். கம்யூனிஸ்டுத் தோழர்கள் வேண்டுமானுல், 'ஏக இந்தியா' பேசாமல், திராவிட நாட்டில் பிரச்சாரம் செய்யட்டுமே! அவர்களின் பலாத்கார சர்வாதிகாரத்துக்கு மக்கள் தங்களை பலியிட்டால் ஆண்டுவிட்டுப் போகட்டுமே.

அதை விடுத்து, குருசேவுக்கு வழுக்கைத்தலை, எண்ணெய்விட்டு சீவுவதில்லை என்றுல் இங்கு இருக்கும் திருப்பதிக்கு வேண்டிக் கொண்டு முடிவளர்க்கும் 'அகில உலகக் கண்ணேட்டம்' எண்ணெய்க்கடையை பகிஷ்கரிக்கிறது என்றுல் என்ன பொருள் இருக்க முடியும்?

தி. மு. க. ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள டெல்லியின் சர்வாதிகார தலைமையே வேண்டாமென்கிறது. பல்லாயிரம் மைல்களுக்கு அப்புறம் உள்ள மாஸ்கோவின் சுரண்டலையா அனுமதிக்கும்?

முடிவாக ஒன்று, கம்யூனிஸ்டுச் சேவல் கூவினுலும், கூவாவிட்டாலும் திராவிடச் சூரியன் உதிக்கத்தான் போகிறது!

அப்படி எழுகின்ற திராவிட நாட்டில் 'கம்யூனிஸ்டுக் கட்சி' என்று பெயர் சொல்லவாவது ஒரு அமைப்பு தேவையென்றுல் திராவிடத்தில் வாழும் கம்யூனிஸ்டுத் திராவிடர்கள் தங்கள் கூடாரத்தை டெல்லியினின்று மாற்றி, சென்னையில் அடித்து தங்கள் இன உணர்ச்சியைக் காட்டட்டும்.

இல்லையெனில் வருங்காலத் திராவிடத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலை, இன்றைய 'பாகிஸ்தானில்' கம்யூனிஸ்டுக் கட்சி, அடைந்த 'சமாதி' நிலை அடையும். அதாவது கட்சி புதையுண்ட இடத்தில் புல் முளைத்துவிடும்.

"இன்றைய பாகிஸ்தானில் கம்யூனிஸ்டுக் கட்சியே கிடையாது"– அணிமையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் டாங்கே கூறியிருக்கிருர்.

"1947-க்கு முன்னே, பாரத மாதாவின் உடற்பகுதி பாகிஸ்தான் என்ற பெயருடன் வெட்டுண்டு போகாததற்கு முன்னே, தற்போதைய பாகிஸ்தான் பகுதியில் இயங்கிக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சி என்ன கதி அடைந்தது? அது தற்போது ஏன் இயங்குவதில்லை?"– டாங்கேயின் முகத்தைப் பார்த்து ஒரு பத்திரிகை நிருபர் கேள்வி கேட்டார்.

"அங்கு அரசியல்நிலைமைகுழம்பி இருக்கிறது. ஆகையினுல் நாங்கள் அங்கு கம்யூனிஸ்டுக் கட்சியை தொடர்ந்து நடத்த இயலவில்லை"– டாங்கே.

இதுவா பாகிஸ்தானில் கம்யூனிஸ்டுக் கட்சி அழிந்ததற்குக் காரணம்?

டாங்கேயின்மனச்சான்றுகூறுமே இது அல்லவென்று.

1947-க்கு முன்னே முஸ்லிம்கள் தங்கள் இனத்துக்கும், நாட்டுக்கும் விடுதலை கோரி பாகிஸ்தான் பெற எழுந்தபோது இந்த 'ஏக இந்தியாக் கம்பெனி' கூட்டு முதலாளிகளான கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ்காரர்களும், 'இந்தியாவைத் துண்டாடக்கூடாது, பாகிஸ்தான் பகற் கனவு' என்று கூறி பச்சைத் துரோகம் செய்தனர். காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சியும், கம்யூனிஸ்டுகளின் சதியும்பலிக்கவில்லை. பாகிஸ்தானின் பச்சைக் கொடி பட்டொளி பறக்கத்தான் செய்தது.

பாகிஸ்தான் மக்கள் இன உணர்ச்சி அளவுக்கு மீறின வகையில் உடையவர்கள். தமிழர்களைப் போல், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்; இன்னு செய்தார்க்கும் இனியனவே செய், 'நல்லபாம்பு உன்னைக் கடிக்க வருகிறதா? வரட்டும். நீ ஓடிவிடாதே நில். நீ வேகமாக ஓடினுல். அதனுல் உன்னுடன் போட்டியிட முடியாது. உன்னைக் கடிக்க வருகிறதே என்று நீ அதை அடித்துக் கொன்று விடாதே. அது வாயில்லா ஜீவன் கடித்துவிட்டுப் போகட்டும். உன் உயிர் மட்டுந்தானே போகும். பரவாயில்லை. அது மகிழட்டும் உனக்கு நாங்கள் நீ இறந்த பிறகு, 'நல்ல பாம்பிற்கு தன் நல்லுயிரை ஈந்த நல்லவன்' என்று புகழ்ப் பட்டம் தருகிருேம். அது போதாதா உனக்கு? அந்தப் பட்டம் உன் பிள்ளை, பெண்டுகளுக்கு சோறு போடும்' என்று 'பண்பு' பேசும் குணத்தினர் அல்லர்.

அடிக்கும் அடி, உதைக்கு உதை, ரத்தத்துக்கு ரத்தம் வாளுக்கு வாள் நஞ்சுக்கு நஞ்சு, என்று பழிக்குப் பழிவாங்கும் மரபினர்.

பாகிஸ்தான் விடுதலை பெற்றவுடன் முதல் வேலையாக பாகிஸ்தானிகள், எங்களுக்கு விடுதலை கிடைக்கக்கூடாது என்று வேலை– துரோக வேலை செய்த கம்யூனிஸ்டுக் கட்சியே! நீ உன் பரம்பரை வழக்கப்படி 'அண்டர் கிரவுண்ட்' காட்சியிலேயே, இரு. நிரந்தரமாக வெளியில் தலைகாட்டாதே. காட்டினுல்?" என்று கையில் கத்தியை எடுத்துக்கொண்டார்கள்.

'கதிர் அரிவாள்' பாகிஸ்தானில் இருந்த இடம் தெரியவில்லை!

சரித்திரம் திரும்புகிறது!

"பாகிஸ்தான் பகற்கனவு' என்ற அதே கம்யூனிஸ்டுத் தோழர்கள், தி. மு. க. ஒரு பிரிவினை சக்தி, ஒடுக்க வேண்டும் என்கிருர்கள்.

ஒரு இடத்தில் ஒரு கொள்கையை ஆதரித்து தோல்வியுற்ற அனுபவத்தை பாடமாக ஏற்றுக்கொண்டு மறு இடத்தில் புத்திசாலித்தனமாக நடந்து முன்னேறும் அறிவு எல்லாருக்கும் இருந்து விடுவதில்லை. 'ஏக இந்தியக் கம்யூனிஸ்டு'களுக்கு பாகிஸ்தான் ஒரு பாடம். தி. மு. க. திராவிட நாட்டுப் பிரச்சனையில் கம்யூனிஸ்டுகள் கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறது.

பாகிஸ்தான் கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு ஒரு பாடம் திராவிடஸ்தான்.

வினு நமக்கல்ல; அவர்களுக்கு! பதிலில் கம்யூனிஸ்டுகளின் எதிர்கால 'வாழ்வு' இருக்கிறது!

— அழகிரி விசுவநாதன்

மே - 10, 11 சனி, ஞாயிறு கிழமைகளில்

தஞ்சை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

❁ திருவாரூர் ❁

தலைவர் : கே. ஏ. மதியழகன் பி. ஏ. ★ திறப்பாளர் : ப. உ. சண்முகம் எம். எல். ஏ.

முதல்நாள் 10-5-58 சனி இரவு 10-மணிக்கு

மு. கருணாநிதி எம். எல். ஏ. நடிக்கும்

புதுமை நாடக மன்றத்தாரின்

"உதய சூரியன்"

(கொள்கை விளக்க நாடகம்)

❁

11-5-58 ஞாயிறு காலை 9-மணிக்கு

குளிக்கரை, இசைப்பெருங்கோ

கே. எஸ். பிச்சையப்பா அவர்களின்—நாயன இசை.

❁

மாநாட்டில் :

இசைமுரசு நாகூர் அனிபா. மன்னை சுந்தரேசன் ஆகியோர் இயக்கப் பாடல்கள் முழங்குவர்.

—முன் பக்கத் தொடர்ச்சி—

நன்று? உலகுக்கே உரியவர்களாக வாழ்வது நன்று?

கல்வி ஒருவனை உலகுக்கே உரியவனுக்கிவிடுகிறது.

வள்ளுவரும், ஷேக்ஸ்பியரும் உலகுக்கே உரியவர்களானது எப்படி? கல்வியாலும் புலமையாலும் அன்றே?

அவ்வாறு உலக முழுமையும் வரவேற்கப் பெறுகின்ற புலமை நலத்தை நம் குழந்தைகள் பெற வேண்டும். சென்றவிடமெல்லாம் சிறப்புத் தருகின்ற கல்வி நலத்தை அரும்பாடுபட்டுத் தேட வேண்டும்.

ஆளுகின்ற நாட்டில் மட்டுமே சிறப்புண்டு புவிமன்னர்களுக்கு. அவர்களுடைய ஆணையும் சொல்லும் அந்த நாட்டின் எல்லைக்குள் தான் செல்லும். அதற்கு வெளியே அவர்களுக்குச் செல்வாக்கில்லை, சிறப்பில்லை, பெருமையில்லை.

கவிமன்னர்களுக்கும் கற்றவர்களுக்கும் ஆளுகின்ற நாடென ஒன்று தனியே இல்லையெனினும், உலகையே ஆளுகிறவர்கள் அவர்கள். அவர்களின் புகழுக்கு எல்லை இல்லை. எல்லை கடந்து உலகெங்கும் பரவி நிற்பது அவர்கள் புகழ்.

ஆளுகின்ற புவிமன்னர்கள் வேற்று நாட்டில் தம் ஆணையை நிலைநிறுத்த எண்ணினுல் அந்நாட்டின்மீது படையெடுக்க வேண்டும். படை பலத்தாலேயே இன்னொரு நாட்டு மக்களை அவர்கள் வெல்ல முடியும்.

ஆனுல் கவிமன்னர்களோ தம் புலமையாலேயே உலகையெல்லாம் தம் செங்குடைக்குக் கீழ் கொண்டு வந்து விடுகின்றனர். போரில்லை, துன்பமில்லை, அழிவில்லை, கசப்பில்லை, வையகமே அவர்கள் வசப்பட்டுவிடுகிறது. புவிமன்னர்கள் உலக சக்கிராதிபதிகள் ஆவது இப்படி:

ஔவையாரின் மூதுரைப் பாட்டு மன்னனையும் மாசறக் கற்றோனையும் சீர்தூக்கிப் பார்த்துக் கற்றோனே மன்னனைவிடச் சிறப்புடையவன் என்று திட்டவட்டமாக உரைத்து விடுகிறது.

அரனுசக்கு அவன் தேசத்தில் தான் சிறப்பு உண்டு. இதற்கு ஒரே காரணம் கூறுகிருர் ஔவையார். ஆனுல் அசைக்கமுடியாத, யாரும் மறுக்கமுடியாத காரணம். அந்த உண்மையை ஒப்புக்கொண்டால் அரசனைவிடப் புலவனுக்கே சிறப்பு மிகுதி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுவிடுவோம்.

சென்ற இடமெல்லாம் சிறப்பும் சீரும் தருகின்ற கல்வி உயரிய செல்வம்; அதனைப் புகழ் முட்ட ஈட்டுவது உங்கள் கடன். நீங்கள் கற்றோராகச் சிறந்து உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் பெரும் புகழைத் தேடித் தருவீர்களென்று நம்பலாமல்லவா?

★

(மலாயா வானெலி தமிழ்ப் பள்ளிக் கூடப் பகுதியில் 21-3-58 அன்று ஒலிபரப்பப்பட்டது).

மூதுரை விளக்கம் முற்றிற்று

அடுத்த இதழ் முதல்

தென்றல்

பன்னிரண்டு பக்கங்களாக

வெளிவரும்.

4-5-58 ஞாயிறு மாலை
6-30 மணிக்கு

எம். ஆர். ராதா

நடிக்கும்

இரத்தக் கண்ணீர்

சென்னை

ஒற்றைவாடைத் தியேட்டரில்

கட்டணம்: 3, 2, 1. அணு 8.

வெண்பாப் போட்டி

16. எழுவாய் எழுவாய் இனி.

★ ஈரோட்டு வானில் எழில்காஞ்சிச் செங்கதிரோன்
தேரோட்டி வந்ததனுல், செந்தமிழா !—பாரில்
புழுவாய் உழலாமல், புத்துணர்ச்சி பெற்றே
எழுவாய் எழுவாய் இனி.

—ந. அலி. துறையூர்.

வாய்மூடி நின்றிருந்த வண்டமிழ்ச் செல்வரெலாம்
பாய்ந்தோடி போர்ப்பரணி பாடுகின்ருர்—தாயின்
அழுகுரல் கேட்டும் அமைந்திருத்தல் நன்ரு?
எழுவாய் எழுவாய் இனி.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

எல்லா வளமும் இமிழ்கடல்கள் முப்புறமும்,
நல்கப் பழம்புகழை நற்றமிழும்—ஒல்கா(து)
எழிலோ(டு) உனக்கிருக்க ஏன்தயக்கம்? ஏறே !
எழுவாய் எழுவாய் இனி.

— கு. இரமாதேவி, சென்னை-1.

கொல்லைக்கே உன்தாயார் கூழ்கொண்டு போய்விட்ட
நல்ல சமயத்தில் நான்வந்தேன்—வல்லி
தழுவி மகிழ்வதற்குத் தாமதம் வேண்டாம்
எழுவாய் எழுவாய் இனி.

—வே. கருப்பையா, மதகுபட்டி.

வெள்ளி முளைத்து விடியல் புலர்ந்ததுவால்;
கொல்லைச் சுவர்க்கோழி கூவுதுவாள்;—வல்லி !
உழுது விதைவிதைக்க ஒன்ருகச் செல்வோம்
எழுவாய் எழுவாய் இனி.

—அமரன், தேனி.

செந்தமிழர் செத்துவிட்டார் என்றெண்ணி இந்தியினை
இந்நாட்டில் ஏற்றிட்டார் ஆட்சிதனில்—அன்னர்
அழிந்திடவே ஆர்வமுடன் போரிடவே அன்பே
எழுவாய் எழுவாய் இனி.

—பு. ந. குமாரசாமி, புதுப்பேடு.

பெய்தமழை நின்றிலதால் பேய்க்காற்றும் வீசுவதால்
மெய்சிலிர்ப்ப நல்வீடு யேல்விழுதே—ஐயோ
அழுப்மைந்தன் பார்இங்கே ஆரமுதே ! தூங்கேல்
எழுவாய் எழுவாய் இனி.

—கோ. இராமநாதன், புதுப்பேட்டை.

அடிமையாய் வாழ அனுமதித்தாய் நச்சுக்
கொடிபடர பந்தர்க்கோல் நட்டாய்—மிடியால்
தொழுது வணங்கித் துவண்டதெலாம் போதும்
எழுவாய் எழுவாய் இனி.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

உற்ற தமிழ்நாடும் ஓங்கு மெழில்தமிழும்
பற்றற்ருேர் காலடியில் பாழ்படவோ ?—சற்றே
விழிப்பாய் தமிழா; வளம்காக்க நீதான்
எழுவாய் எழுவாய் இனி.

—சாமிநாதன், திருவண்ணுமலை.

கண்ணே ! கருவிழியே ! கற்பகமே ! மண்புரளும்
பொன்னே ! பனிமலரே ! பொக்கிஷமே அண்ணன்தான்
வாழைப் பழமுனக்கு வாங்கியதோ வாரான்
எழுவாய் எழுவாய் இனி.

—ஆ. வி. நாதன், திருவை.

கட்டுண்டோம்; பல்கால் கழித்திட்டோம்; இன்னு(ம்)நம்
திட்டமெலாம் வீணுகிச் சீர்கெடவோ ?—கெட்ட
புலிசிகர்த்த புல்லியரைப் பூண்டோடொழிக்க
எழுவாய் எழுவாய் இனி.

—தாம்பரக்கிழான், சென்னை.

செத்தும் மொழிகாத்த தாளமுத்தைப் பின்பற்ற
எத்தனையோ பேர்கள் இருக்கின்ருேம்—நித்தம்
இழிவுள்ள இந்தியே சொந்தஇடம் நோக்கி
எழுவாய் எழுவாய் இனி.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

சிந்தித்துப் பார்த்தாயா செந்தமிழா ? சீர்கெட்ட
இந்திக்கா இந்நாள் வரவேற்பு ?—சிந்தை
எழுச்சியுடன் செந்தமிழ் ஏற்றமுற பொங்கி
எழுவாய் எழுவாய் இனி.

—குமர. நடராசன், குடந்தை.

தாய்வீட்டில் கும்பிட்ட 'சாமி'களைத் தான்மறந்து
தூய்மையுடன் தொண்டாற்று தோகையே !—வாய்த்த
கொழுநன் அடிதொழுது பின்தூங்கி முன்னே
எழுவாய் எழுவாய் இனி.

—சிந்தாமணி, கருப்பட்டிபாளையம்.

அங்கண் துடிப்பதுமேன் அன்புமுகம் மாறுவதேன்
நங்கைநீ துஞ்சுங்கால் நான்கண்டேன்—நன்கு
பிழையுற்ருய் உன்நடிப்பில் பொய்த்தூக்கம் போதும்
எழுவாய் எழுவாய் இனி.

—ச. கங்கா, காரைக்கால்.

மாலைவரக் கண்டு மயங்கும்என் கண்ணே ! நீ
காலைவரக் கண்டு கலங்குவதேன் ?—நாளைக்
கழிக்கவோ கைப்பிடித்தேன்; நற்கடன் ஆற்ற
எழுவாய் எழுவாய் இனி.

—ந. இளந்திரையன், அரக்கோணம்.

இடியிடித்து மின்னுவதால் இன்றுறுதி பெய்தல்;
துடிதுடித்தோர் இன்னல் தொலைக்க—நொடியில்
நுழைவாய்; உழுவாய் நிலத்தை ! புறப்பட்(டு)
எழுவாய் எழுவாய் இனி.

—தே. அறிவுடைநம்பி, சென்னை-1.

ஊழ்வினையென் றேயுரைத்து உன்னதமா முன்வாழ்வை
பாழ்படுத்திக் கொள்ளுவதோ பண்புடமை—தோழா !
அழுக்கின்றி யுன்கடமை யாற்றுவித்தே வாழ்வில்;
எழுவாய் எழுவாய் இனி.

—முத்தூரான், பொள்ளாச்சி.

தாழ்ந்ததடா நம்கலைகள், தாய்நாடும் வீழ்ந்ததடா !
சூழ்ந்ததடா நம்நாட்டில் சூழ்ச்சியிருள் !—வாழும்
செழுநாட்டை மீட்டிடவே செந்தமிழா ! ஆர்த்தே
எழுவாய் எழுவாய் இனி.

—அன்பின்ஒளி, தஞ்சை.

அஞ்சிப் பிழைக்காதே ! அன்பிலரைக் கெஞ்சாதே !
துஞ்சித் திரியாதே ! தூய்தமிழா—நெஞ்சில்
ஒழுக்கமிலா இந்தி உலவுவதை நீக்க
எழுவாய் எழுவாய் இனி.

—பசுமலைவிர. முருகேசன்.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு "தென்றல்" சந்தா.

விற்பனையாகிறது !
முல்லை
- சிறப்பு மலர் -

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு